சாட்சிகள் வாக்குமூலம்

பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.86/2020

வாக்குமூலம்: வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆறுமுகம் | த/பெ. | : |
| கிராமம் | : | வேலை | : |
| வட்டம் | : | வயது | : |
| மாவட்டம் | : | நாள் | : 19.07.2023 |

1973ம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஜூலை மாதம் 19−ம் நாள் அளித்த சாட்சியம்.

<u>முதல் விசாரணை:</u> என்னுடைய முதல் விசாரணையை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். முதல் நிரூபண பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விசயங்கள் எல்லாம் என்னால் சொல்லப்பட்டவைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான்தான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். 01.09,2020ம் நாளிட்ட என் தரப்பு மாதிரி வரைபடம் வா.சா.ஆ.1. 20.07.2012ம் நாள் நானும், பிரதிவாதியும் மற்றும் குடும்பத்தார்களும் சேர்ந்து இயற்றிக்கொண்ட பாக ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 18.06.2020ம் நாள் என் பெயரில் உள்ள தனிப்பட்டா (பட்டா எண்.864) கணிணி நகல் வா.சா.ஆ.3. 21.08.2020ம் நாள் என் பெயரிலும், பிரதிவாதிகளின் பெயரிலும் கூட்டாக உள்ள கூட்டுப்பட்டா (பட்டா எண்.806) கணிணி நகல் வா.சா.ஆ.4. வழக்குச்சொத்தின் அமைப்பை காட்டக்கூடிய புகைப்படங்கள் குறுந்தகடுடன் (5 எண்ணிக்கை) வா.சா.ஆ.5. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை நீ.ம.சா.ஆ.1. நீதிமன்ற ஆணையரின் வரைபடம் நீ.ம.சா.ஆ.2. வட்ட சார் ஆய்வாளர் வழங்கிய வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆகியவை தாக்கல் செய்கிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.07.19 18:40:04 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பழனி.